PR/2019/1/T


# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை
தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629
மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk


ஜனவரி 10, 2019

## ஊடக அறிக்கை

### கேகாலையில் பாடசாலையின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஜப்பான் உதவி

கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ள ஹல்லொலுவ, கனிஷ்ட பாடசாலையின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஜப்பான் அரசாங்கம் 89,223 அமெரிக்க டொலர்களை (அண்ணளவாக. Rs. 14million) வழங்கியுள்ளது. இதனை அடித்தள மக்களை பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் இவ் உதவியை வழங்கியுள்ளது.

ஹல்லொலுவ, கனிஷ்ட பாடசாலையின் கல்வி, மலசலகூட வசதிகளை அபிவிருத்தி செய்வதனை இத் திட்டம் நோக்காக கொண்டது. தற்போது இப் பாடசாலை சிறந்த கல்வியினை வழங்குவதற்கு மேற்குறிப்பிட்ட வசதிகளை குறைந்தளவிலேயே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத் திட்டத்தின் கீழ் இப் பாடசாலைக்கு புதிய வகுப்பறைக் கட்டடமும், புதிய தளபாடங்களும் மேலும் பாடசாலையை வந்தடைவதற்கான புதிய பாதை, விளையாட்டு மைதானம், நீா் வசதி என்பன வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் மாணவா்கள் கல்வி கற்பதற்கான சிறந்த சூழல் ஏற்படுவதோடு அவா்களது சமூக திறன்களை வளா்க்க சந்தா்ப்பம் ஏற்படும்.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர், அதி மேன்மைதகு அகிரா சுகியாமா மற்றும் ஹல்லொலுவ , கனிஷ்ட பாடசாலை அதிபா் P.W.G.M.N. வல்பொல ஆகியோரிற்கு இடையே 2019 ஜனவரி 10ஆம் திகதி இத் திட்டத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களைச் சோ்ந்த பல திறமையான மாணவா்கள் இப் பாடசாலையில் கல்வி கற்கின்றனா் அத்தோடு இப் பாடசாலை கேகாலை மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்துள்ளது என, இந் நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை அதிபா் P.W.G.M.N. வல்பொல உரையாற்றும் போது தெரிவித்தாா்.

தற்போது போதியளவு வகுப்பறை இல்லாத காரணத்தினால் மழை காலங்களிலும் வெயில் காலங்களிலும் மாணவா்கள் மரங்களின் கீழ் கல்வி கற்கின்றனா். தூய குடிநீா் பற்றாக்குறையின் காரணமாக மாணவா்கள் சுகவீனமடைகின்றனா் அத்துடன் மாணவா்கள் சிறிய மைதானத்தில் விளையாடுவதையும் பாா்க்கும் போது மிகவும் கவலையளிக்கின்றது. எமது பாடசாலையை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுடைய நேரத்தில் உதவிபுரியும் இந்தத் திட்டத்திற்கு நாம் எமது மனமாா்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். பாடசாலை அபிவிருத்தியின் பின்னா் மாணவா்களின் வரவை எம்மால் அதிகரித்துக் கொள்ள முடிவதோடு மேலும், மாணவா்கள் பாடசாலையில் இணைவதற்கு வகுப்பறை பற்றாக்குறை பாரிய சவாலாக இன்றும் காணப்படுகின்றது என அவா் மேலும் தெரிவித்தாா்.

ஹல்லொலுவ , கனிஷ்ட பாடசாலை மாணவா்கள், ஊழியா்கள் மற்றும் கிராமத்து மக்கள், பழைய மாணவா்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோா் ஜப்பானிய அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதியின் மூலம் செயற்படுத்தப்படும் அடித்தள மக்களை பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் பாடசாலையினை அபிவிருத்தி செய்யும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு தமது மனமாா்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றனா்.

**********************************************************

மேலதீக விபரங்களுக்கு தயவுசெய்து ஜப்பானியத்தூதரகத்தின் அபிவிருத்தி கூட்டுறவுப்பிரிவைத் தொடா்புகொள்ளவும்.

Tel: 011-269-3831~3 (ext.225)